சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

<u>Case No. MCOP. 23/2017</u>

2025ம் ஆண்டு ஜூன் மாதம் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய **எ.ம.சா.2-**இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திரு.வ.சிவக்குமார், எழுத்தர் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜராஜேஸ்வரி | தொழில் | மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை1, ஆரணி ஆர்.டி.ஓ அலுவலகம். |
| கணவர் பெயர் | ஆனந்தன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**<u>17.06.2025 முதல் விசாரணை</u>**

சாட்சிக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டு அழைப்பாணையின் பேரில் சாட்சி ஆஜர்

1. நான் ஆரணி மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை1 ஆக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்காக எனக்கு அதிகார கடிதம் அளிக்கப்பட்டுள்ளது அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். சபாபதி என்பரின் ஓட்டுநர் உரிமத்தை ஆஜர் படுத்த அழைப்பாணை வந்ததா என்றால் வந்தது. சபாபதியின் ஓட்டுநர் உரிமம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். அசல் பதிவேடு கொண்டு வந்துள்ளேன். எனக்கு சாட்சியம் அளிக்க அளித்த அதிகார கடிதம் **சா.சா.ஆ.1** ஆகவும், சபாபதியின் ஓட்டுநர் உரிமத்தின் சான்றிட்ட நகல் **சா.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. நான் தாக்கல் செய்த ஓட்டுநர் உரிமத்தின் படி சபாபதிக்கு 07.11.2016 ம் தேதி டிராக்டர் ஓட்டுவதற்கான உரிமம் உள்ளது.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. சபாபதிக்கு 07.11.2016 ம் தேதி அன்று டிராக்டர் ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உயிர்ப்பில் இருந்ததா என்றால் சரிதான். அவரின் ஓட்டுநர் உரிமம் 14.03.2018 வரை செல்லத்தக்கதாக உள்ளது என்றால் சரிதான்.